பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆடி 04 | சனிக்கிழமை | 20.07.2024 | கதிர் 255

## அரசமைப்புத் திருத்தம் குறித்து

# "அச்சம் வேண்டாம்"

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

அரசமைப்பின்22ஆவதுதிருத்தம் குறித்து இலங்கை மக்கள் எவ்விதத்திலும் அச்சம் கொள்ள வேண்டாமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். 1931 சர்வஜன வாக்குரிமை கிடைத்தது முதல் தொடர்ச்சியாக ஜனநாயகத்தைப்பாதுகாத்துவரும் மரபுகொண்டதுஇலங்கைஎன்றும் அவர் தெரிவித்தார்.

காலி பெலிகஹ பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டபுதியநீதிமன்றக் கட்டடத் தொகுதியை நேற்றுத் திறந்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

காலி பிரதேச மக்களின் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கும் ☞ 2

## இனி அது ரகசியம் அல்ல!

அரசமைப்பின்22ஆவதுதிருத்தம் தொடர்பான முன்மொழியை - வரைபை - வர்த்தமானி மூ-லம் வெளியிடவேண்டாம் என்று நீதி அமைச்சின் செயலாளருக்கு நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச உத்தரவிட்டபோதும் அந்த வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியானது.

இந்த 22ஆவது திருத்தம் தொடர்பில் மக்களிடம் பெரும் சந்தேகங்கள் இருக்கின்றன. ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போடுவதற்கான ரணிலின் கடைசிப் பிரம்மாஸ்திரம் இதுதான் என்கிற சந்தேகம் நிலவுகின்றது. இதனால் சட்டத்தரணிகளின் கூட்டிணைவு உட்படப் பல அமைப்புக்களும்இந்தமுயற்சியைக் கண்டித்துள்ளன.

இந்தக் கண்டனங்களைத் தொடர்ந்-து ஜனாதிபதித் தேர்தல் முடியும் வரைக்கும் இந்தத் திருத்தத்தை நாடாளுமன்றத்திற்குக் கொண்டுவர வேண்டாம் என்று தெரிவித்த நீதி அமைச்சர், அதனை வர்த்தமானியில் வெளியிடுவதை நிறுத்துமாறு தனது அமைச்சின் செயலாளருக்குஉத்தரவிட்டிருந்தார். ஆனாலும் ஜனாதிபதியின் உத்தரவின்பேரில்அந்தவர்த்தமானி வெளியாகிவிட்டது.

இருந்தாலும்ஜனாதிபதியும் ☞ 2

## அரசமைப்பின் 22ஆவது திருத்தம் வர்த்தமானியில் நேற்று வெளியீடு

அரசமைப்பின் 22 ஆவதுதிருத்தசட்டமூலம் ஜனாதிபதியின் பணிப்புக்கு அமைய வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பதவி காலம் தொடர்பில் அரசமைப்பின் ஏற்பாட்டில் காணப்படும் குறைபாட்டைதிருத்தும் வகையில் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் குறிப்பிடுகிறது.

ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும் வரை 22 ஆவது திருத்த சட்ட மூலத்தை வர்த்தமானி அறிவித்தலில் வெளியிட வேண்டாம் என தான் நீதியமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக நீதியமைச்சர்விஜயதாஸ ராஜபக்ஷஊடகங்களுக்கு குறிப்பிட்டிருந்தநிலையில் ஜனாதிபதியின் ☞ 2

## 22ஆவது திருத்த வர்த்தமானியால் தேர்தல் நடத்தப்படுவது தடைப்படாது

அரசமைப்பின் 22வது திருத்தம் குறித்த வர்த்த மானி அறிவித்தல் வெளியாகியுள்ளதன் காரணமாக ஜனாதிபதி தேர்தலை நடத்துவது தடைப்படாது என்று தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அரசமைப்பின் 22ஆவதுதிருத்தசட்டமூலம் ஜனாதிபதியின் பணிப்புக்கமைய வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பதவி காலம் தொடர்பில் அரசியலமைப்பின் ஏற்பாட்டில் காணப்படும் குறைபாட்டை திருத்தும்வகையில்சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் குறிப்பிடுகிறது.

ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும் வரை 22 ஆவதுதிருத்தசட்டமூலத்தை வர்த்தமானி அறிவித்தலில் வெளியிட வேண்டாம் என தான் நீதியமைச்சின் செயலாளருக்குஆலோசனை வழங்கியுள்ளதாக நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ ஊடகங்களுக்கு குறிப்பிட்டிருந்த நிலையில் ஜனாதிபதியின் பணிப்புக்கு அமைய சட்டமூலம் நேற்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பத்தரமுல்லை
## கடவுச்சீட்டு அலுவலகத்தில் நேற்று அமைதியின்மை

கடவுச்சீட்டை பெற்றுக்கொள்வதற்காக நேற்று(19) பெரும்பாலானோர் வருகை தந்ததால் பத்தரமுல்லை குடிவரவு-குடியகல்வுதிணைக்களத்தின் தலைமை அலுவலக வளாகத்தில் அமைதியின்மை ஏற்பட்டது.

சேவைகளைப் பெறுவதற்காக முன்கூட்டியே பதிவு செய்யாமல் குடிவரவு-குடியகல்வுதிணைக்களத்தின் தலைமையகத்திற்கு நேற்றுப் பலர் வருகை தந்ததால் இந்நிலைமை ஏற்பட்டது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

விண்ணப்பதாரர்களின் நலனுக்காகவும் செயல்முறையை சீரமைக்கவும் கடவுச்சீட்டுகளை ☞ 2

## அரச நிறுவனங்களின் மறுசீரமைப்பால் கல்வி, சுகாதாரத்திற்கு அதிக நிதி கிட்டும்

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

அரசநிறுவனங்களை மறுசீரமைப்பதன்மூலம் எஞ்சும் நிதியிலிருந்து எதிர்காலத்தில் கல்வி மற்றும் சுகாதாரத்திற்கு அதிக நிதியை ஒதுக்க முடியும்என்றுஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

காலி-வலஹன்துவ பிரதேசத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ருஹுணு பல்கலைக் கழகத்தின் புதிய சுகாதார விஞ்ஞான பீடத்தை திறந்துவைக்கும் நிகழ்வில் நேற்று கலந்து கொண்டஅவர்இதனைத் தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:

அமைச்சர் ரமேஷ் பத்திரன இந்த இணை சுகாதார பீடத்தை திறந்து வைப்பதற்காகத்தன்னை அர்ப்பணித்தார். இந்தக் கட்டடத்தைஅனைவரும் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். அமெரிக்கா போன்ற நாடுகளில் பெரிய பல்கலைக்கழகங்கள்24 மணிநேரமும்இத்தகைய கட்டடங்களால் பயனடைகின்றன. அரசுப் பணம் கல்விக்காகப் பயன்படுத்தப்படும்போது, அதை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இந்த வகுப்புகள்சீர்குலைந்தால் உங்களுக்கும் நாட்டுக்கும் பாதிப்பு ஏற்படும். ☞ 2

## ஜனாதிபதித் தேர்தலின்போது அரச ஊழியர் மீது ஒரு கண்

ஜனாதிபதித் தேர்தலின் போது அரச உத்தியோகத்தர்களின் செயற்பாடுகளை உன்னிப்பாக கண்காணிப்பதற்கு உள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் குறித்து அறிவிப்பு வெளியான பின்னர் நாட்டில் நடைமுறையிலுள்ள தேர்தல் சட்டத்தின் பிரகாரம் ஒவ்வொரு அரசஉத்தியோகத்தரும் செயற்பட வேண்டும்.

அரச உத்தியோகத்தர்கள் சட்டத்தை பாரபட்சமின்றிஅனைவருக்கும் பொதுவாக செயற்படுத்த வேண்டும். சட்டத்தை உரியமுறையில்கடைப்பிடிக்காதுசிலஅதிகாரிகள் செயற்படுவதால் அங்கு மக்களின் மனித உரிமைகள்மீறப்படுகிறது

இதனால்ஜனாதிபதித் தேர்தலின் போது அரச உத்தியோகத்தர்கள் மற்றும் அரச நிறுவனங்கள் மக்களின் மனித உரிமைகளை மீறும் வகையில் செயற்படக்கூடாது என்றார்.

## மனிதவள அபிவிருத்திக்கான பிரந்திய மையமாக இலங்கை

### மாற்றுவதற்கு முயற்சி என்கிறார் ரணில்

மனித வள அபிவிருத்திக்கான பிராந்திய மையமாகஇலங்கையை மாற்றுவதற்குமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

அலரி மாளிகையில் நேற்று நடைபெற்ற '2024 இலங்கை மனித மூலதனஉச்சிமாநாட்டில்' உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:

2022ஆம்ஆண்டில், சுமார் நான்கு இலட்சம் இலங்கையர்கள்,நாட்டை விட்டு வெளியேறியதாக கூறப்படுகிறது. 2023இல் நாட்டை விட்டு வெளியேறியவர்களின் எண்ணிக்கையும் இதே அளவானதாகும். இந்த எண்ணிக்கைதொடர்ந்து குறையும் அல்லது அதே அளவில் இருக்கும்.

ஆனால்நாம்தேவையானஅடிப்படைபொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொண்டால், 2026-2027ஆம்ஆண்டிற்குள் இந்த நிலையை, நிறுத்த முடியும். நம் நாட்டின் வங்குரோத்துநிலை அவர்களின் வாழ்க்கையை மிகவும் கடினமாக்கியது. அவர்களின் பிள்ளைகளின்கல்வியில் கவனம்செலுத்தவேண்டியிருந்தது. அவர்கள் வாங்கியகடனைதிருப்பிச் செலுத்தப் பணம் போதுமானதாக இருக்கவில்லை. அதனால் நாட்டைவிட்டுவெளியேற முடிவு செய்தனர்.

ஒரு டொலரின் பெறுமதி 185 ரூபாயாக இருந்தபோது தான் சம்பளம் ☞ 8

## விசேட தேவை உடையோரும் இம்முறை வாக்களிக்க ஏற்பாடு

ஜனாதிபதித்தேர்தலில் முதன்முறையாக விழிப்புலனற்றோர் மற்றும் செவிப்புலன் குறைபாடுடையவர்கள் வாக்களிக்க சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளஎன்றுதேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.எல்.ரத்நாயக்க தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:

பார்வையற்றோர் பிரெய்ல் முறையில் வாக்குச்சீட்டின்அடையாளங்களை அடையாளம் காணும் விதத்தில் விசேட முறைமை நடைமுறைப்படுத்தப்படும். செவித்திறன் குறைபாடுடையோருக்கு சைகை மொழியில் வாக்குச்சீட்டு குறித்து தெளிவுப்படுத்துவதற்கானவசதிகளும்ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதன் முன்னோடித் திட்டங்கள் கடந்த சில நாட்களாக பல்வேறு பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டதுடன் அதன் வெற்றிகரமான பெறுபேறுகளின் அடிப்படையில் இம்முறை ஜனாதிபதித்தேர்தலுக்கும் அதே வசதிகள் வழங்கப்படவுள்ளன.

வலது குறைந்தோர் வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்வதற்கும் விசேட வசதிகள் ஏற்படுத்தப்படவுகள். ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் பதிவாகியுள்ள ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

நீதி அமைச்சரும் நேற்று காலியில் நீதிமன்றக் கட்டடத் திறப்பு நிகழ்வில் மிகவும் அன்னியோன்யமாக சிரித்துப் பேசியபடி அருகருகே அமர்ந்Oருந்தார்கள். என்ன நாடகம் நடக்கின்றது என்று புலப்படாமல் மக்கள் மண்டையைப் பிய்த்துக்கொள்கிறார்கள்.

அதேபேன்று, அடுத்த வாரம் கூடும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் அரசமைப்பின் 22ஆவது திருத்தம் சமர்ப்பிக்கப்படாது என்று அமைச்சர் அமரவீர நேற்றுத் தெரிவித்திருந்தார். கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அது பற்றி முடிவெடுக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்திருந்தார். ஆனால், நிறுத்தப்பட்டதாகக் கூறப்பட்ட வர்த்தமானி வெளிவந்திருப்பதைப் போலவே அந்தத் திருத்தம் நாடாளுமன்றத்திற்கு விவாத்திற்காக முன்வைக்கப்படுவதும் கூட நடந்தால் ஆச்சரியப்படுவதற்குஎதுவுமில்லை.

..................

ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதியை இந்த மாத முடிவில் அறிவிப்பது என்று தேர்தல்கள் ஆணைக்குழு முதலில் தீர்மானித்திருந்தது. ஆனால், ஆளும் தரப்பும் ரணில் விக்கிரமசிங்கவும் தேர்தலைப் பிற்போடக் கால அவகாசம் வழங்கும் விதத்தில்தான் தேர்தல்க்ள ஆணைக்குழு இப்படி காலம் தாழ்த்துகின்றது என்று எதிர்க் கட்சிகள் கடுமையான விமர்சனத்தை முன்வைத்தன. ஏனெனில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கானதிகதியைஅறிவிக்கும் அதிகாரம் ஜூலை 17 முதல் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்குக் கிடைத்துள்ளது. இருந்தும் இந்த மாத இறுதிவரை திகதியைத் தீர்மானிப்பதற்கு ஆணைக்குழு காத்திருக்க வேண்டிய தேவை என்ன என்பதே எதிர்க் கட்சிகளின் விமர்சனமாக இருந்தது.

இதனையடுத்து, அடுத்த வாரமேகூடி தேர்தல் திகதியைத் தீர்மானிப்பது என்று இப்போது ஆணைக்குழு முடிவு செய்திருக்கின்றது. தேர்தல் எப்படியும் செப்டெம்பர் அல்லது ஒக்டோபர் மாதத்தில்தான் நடத்தப்படும் என்பதால் தேர்தல் திகதியை அறிவிப்பதற்கு அவசரப்படவேண்டியதில்லை என்பதாக கருத்துக்கூறி வந்த ஆணைக்குழுவினர் கடும் விமர்சனங்களை அடுத்து அடுத்த வாரமே கூடி திகதியைத் தீர்மானித்துவிடுவது என்று முடிவு செய்துள்ளார்கள்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## அச்சம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்பாடுகளை வினைத்திறனாக்கும் நோக்கில் 1600 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்தப் புதிய நீதிமன்ற வளாகத்தில், சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றம், இரண்டு மேல் நீதிமன்றங்கள், மூன்று மாவட்ட நீதிமன்றங்கள், இரண்டு நீதிவான் நீதிமன்றங்கள் உள்ளன.

சட்ட உதவி மையம், சமூக சீர்திருத்த அலுவலகம், நன்னடத்தை அலுவலகம், கடன் நிவாரண சபை சட்ட உதவி உள்ளடங்களாக நீதித்துறை பணிகளுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் இந்தக் கட்டடத்தொகுதியில் உள்ளன.

பெயர்ப்பலகையைதிரைநீக்கம் செய்து, நீதிமன்றக் கட்டடத்தை ஜனாதிபதி திறந்து வைத்தார்,

நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:

சுற்றுலா வலயமொன்றை அமைக்கும் நோக்கில் முன்பு நீதிமன்றம் அமைந்திருந்த வளாகத்திலிருந்து வேறு இடத்திற்கு கொண்டுச் செல்லுமாறு அறிவுறுத்தியிருந்தேன். இன்று அந்த பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

காலியை சுற்றுலா வலயமாக மாற்றும்போது இப்பகுதியில் பெரும் ஹோட்டல்களை கட்டமைக்க வேண்டிய இடங்களை அடையாளம் கண்டுள்ளோம். போக்குவரத்துச் சபை, மரக் கூட்டுத்தாபனம், மஹாமோதர வைத்தியசாலை, தாதியர் கல்லூரி, சிறைச்சாலை, தபால் நிலையம் என்பவற்றை நகரின் மத்திக்குக் கொண்டுச் செல்லத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதேபோல் ஹிக்கடுவ பிரதேசத்தில் இதுபோன்றதொரு நீதிமன்றக் கட்டடத்தை நிர்மாணிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

காலி நீதிமன்ற கட்டடம் இந்நாட்டு வரலாற்றின் ஒரு பகுதியாகும். ஒல்லாந்தர் ஆட்சியின் பின்னர் இலங்கையின் ரோமன், டச்சு சட்டங்கள் நடைமுறையில் இருந்தன. இந்த சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்ட காலத்தில் காலி நீதிமன்ற பகுதியாகவே காணப்பட்டது. இங்கு நீதிச் சபை, சிவில் சபை மற்றும் காணி சபையொன்றும் நிறுவப்பட்டது. இவ்வாறுதான் இலங்கையின் நீதிச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. அதன்படி காலி நீதிமன்ற பிரதேசம், மாத்தறை - காலி என்று இரு பிரிவுகளாக காணப்பட்டன. ஆனால் இன்றும் காலி மாவட்டம் மட்டுமே அந்த கட்டமைப்புடன் இயங்கிறது.

காணிச் சபையில் ஒல்லாந்தர் அதிகளவில் அங்கம் வகித்தனர். ருஹூனு பிரதேசத்திலிருந்த இலங்கையர்களும் சிறிதளவில் இருந்தனர். அங்கிருந்துதான் இலங்கையர்கள் சட்டத்தைக் கற்றுக்கொண்டனர். ஆங்கிலேயர் காலத்தில் இவர்கள் சட்டத்தரணிகளாக முன்வந்தனர்.

அதிலிருந்து பல இலங்கையர்கள் நீதித்துறைக்குள் பணியாற்றினர். அதன்பின்னர் சட்டத்துறையிலிருந்து சட்டவாக்கச் சபைக்கு வந்தனர். அதன்படி சட்டவாக்கச் சபையின் அடிப்படையாகவும் சட்டத்தரணிகளே உள்ளனர். பின்னர் டொனமூர் முறையின் கீழ் சர்வஜன வாக்கெடுப்பு கிடைத்தமையினால் அரசமந்திரிகள் சபைகளில் சேவையாற்றினர். பின்னர் சோல்பரி முறைமையின் ஊடாக ஆங்கிலேய முறைமை உருவாக்கப்பட்டது. இந்தியா தனியாதொரு குடியரசு யாப்பைக் கொண்டு வந்தவேளையில் நாம் ஆங்கிலேயர் மரபைப் பின்பற்றினோம்.

பின்னர் கொல்வின் ஆர்.டி சில்வாவின் கீழ் முதலாவது குடியரசு யாப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. ஜே.ஆர்.ஜயவர்தன இரண்டாவது குடியரசு யாப்பினை முன்மொழிந்தார். அதன்படி எமக்கு அரசமைப்பு குறித்த வரலாறு ஒன்று இருப்பதை போலவே சட்டத்துக்கு மதிப்பளிக்கும் பண்பும் இருந்தது.

1931 ஆம் ஆண்டில் ஆசியா, ஆபிரிக்காவில் முதல் முறையாக இலங்கையே சர்வஜன வாக்கெடுப்பு அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டது. வேறு எந்த நாட்டுக்கும் கிடைக்கவில்லை. அமெரிக்காவின் சில பகுதிகளில் கறுப்பினத்தவர்களுக்கு வாக்குரிமை இருக்கவில்லை.

சர்வஜன வாக்குரிமையைப் பெற்றுக்கொண்டதிலிருந்து தொடர்ச்சியாக ஜனநாயகத்தை பேணிவரும் நாடாகவும் இலங்கை மட்டுமே விளங்குகிறது. அதனையிட்டு நாம் பெருமிதம் கொள்ள வேண்டும்

போர் நடந்தபோதும், கலவரங்கள் ஏற்பட்ட போதிலும் 1931 ஆம் ஆண்டு முதல் ஆசியா மற்றும் ஆபிரிக்காவில் ஜனநாயகத்தைப் பாதுகாத்த ஒரே நாடு இலங்கை ஆகும். நாம் எவ்வளவு வாதிட்டாலும் ஜனநாயகத்தை இல்லாமல் ஆக்குவதற்கு இடமளிக்கவில்லை.

தேர்தலில் தோல்வியடைந்த பிறகு, இலங்கையில் மாத்திரமே மோதல் இல்லாமல் அதிகாரம் மாற்றப்படுகிறது. இந்த நாட்டில் ஜனநாயகம் செயல்படுகிறது. விவாதங்கள் இருந்தபோதிலும், ஜனநாயகம் ஒருபோதும் இழக்கப்படுவதில்லை.

சில பிரச்சினைகள் வரும்போது ஜனநாயகம் பறிபோய்விடும் என்று சிலர் சொல்கிறார்கள். நமது சட்டத்துறை, நீதித்துறை மற்றும் அரசியல் முறைமை எப்படியோ இந்த கட்டமைப்பை முன்னெடுத்துச் சென்றுள்ளது. இந்த வகையில் 2022ஆம் ஆண்டு ஜனநாயக அமைப்புக்கு மிகப்பெரிய அச்சுறுத்தல் ஏற்பட்டது. ஆனால் நாங்கள் உடன்பாட்டுடன் முன்னோக்கிச் செல்கிறோம்.

நாடாளுமன்றத்தில் எமக்கு விவாதிக்கலாம். ஆனால் ஜனநாயகம் பாதுகாக்கப்படவேண்டும். தற்போது தேர்தல் நடைபெறவுள்ளது. இந்த காலக்கெடுவுக்குள் தேர்தலை நடத்த வேண்டும் என பிரதம நீதியரசர் தரப்பும், உயர் நீதிமன்றமும் தெரிவித்துள்ளன. அதை நாமும் ஏற்றுக் கொள்கிறோம்.

2015 ஆம் ஆண்டில் நாம் புதிய அரசமைப்பு திருத்தத்தை சமர்ப்பித்தோம். நான் வழக்கமாக இத்தகைய பணிகளை கே. என். சொக்ஸி சட்டத்தரணியிடமே வழங்குவேன். ஆனால் அப்போது அவர் உயிருடன் இல்லாத காரணத்தால் சட்டத்தரணி ஜயம்பதி விக்ரமரத்னவிடம் அந்தப் பணி ஒப்படைக்கப்பட்டது.

அவருக்கு ஒரு வாக்கியத்தை நீக்கமுடியவில்லை. அவ்வளவுதான் நடந்திருக்கிறது. அதற்காகத்தான் இந்த அலறல். இது அவரது கவனக்குறைவாக இருக்கலாம். அந்த தவறிற்கு நாட்டு மக்களிடம் நான் மன்னிப்புக்கேட்கிறேன். அதுபற்றி மேற்கொண்டு கருத்துக் கூற வேண்டிய அவசியமில்லை. எனவே, இது குறித்து பயப்பட வேண்டாம். நமது நாடு 1931 முதல் ஜனநாயகத்தைப் பாதுகாத்து வருகிறது - என்றார்.

## கடவுச்சீட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்குவதற்கான புதிய வழிமுறையை குடிவரவு - குடியகல்வு திணைக்களம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இதற்கிணங்க நேற்று முதல் கடவுச்சீட்டு வழங்கும் புதிய முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. புதிய கடவுச்சீட்டுகளுக்கு விண்ணப்பிக்க விண்ணப்பதாரர் www.immigration.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக முன்கூட்டியே பதிவு செய்ய வேண்டும்.

அவ்வாறு பதிவு செய்ததன் பின்னர், முன்னுரிமை முறையின்படி கடவுச்சீட்டுகள் வழங்கப்படும் என குடிவரவு-குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருக்கின்போதும் நேற்றுக் காலை பத்தரமுல்ல பகுதியிலுள்ள குடிவரவு குடியகல்வு - திணைக்கள அலுவலகத்திற்கு கடவுச்சீட்டுகளை பெற்றுக்கொள்வதற்காக அதிகளவானோர் வருகை தந்ததால் அங்கு நெரிசல் ஏற்பட்டுள்ளது.

திகதி மற்றும் நேரத்தை முன்பதிவு செய்பவர்களுக்கே முன்னுரிமை அளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டதையடுத்து அங்கு அமைதியின்மை ஏற்பட்டது.

குடிவரவு - குடியகல்வு திணைக்களத்திற்கு முன்பாக நீண்ட வரிசைகளும் நெரிசலும் காணப்பட்டதுடன் நிலைமையை கருத்திற்கொண்டு பொலிஸாரை வரவழைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்ததும் குறிப்பிடத்தக்கது.

## விசேட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்களிக்கும் விழிப்புலனற்றோர் மற்றும் செவித்திறன் குறைபாடுடையோர், கிராம உத்தியோகத்தர் மூலம் கண்டறியப்பட்டு அவர்களூடாக தேவையான வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்படும் என்றார்.

## அரச ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் மற்றும் அந்த கூட்டுதாபனத்துக்காக 700 பில்லியன் ரூபா செலவிடப்பட்டதாக இங்கு குறிப்பிடப்பட்டது. ஆனால் அந்த 700 பில்லியன் ரூபாவை பத்து மடங்காக பெருக்கிப் பார்க்கவேண்டும். இவ்வளவு பெரிய தொகையை செலவழித்ததன் விளைவாக மூன்று ஆளும் தரப்புகளின் கீழ் இதனை ஈடுசெய்ய கடன் பெற நேரிட்டது. இதனால், நாட்டின் கடன் தொகை அதிகரித்தது.

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தபோது, முதலில் கடன் வாங்குவதை நிறுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இது கடினமான பணியாகும். ஆனாலும் அதனைச் செய்ய வேண்டியிருந்தது. அதற்குப் பதிலாக, புதிய முறையில் பணத்தைத் தேடிக்கொள்ள வேண்டிய அவசியம் காணப்பட்டது. ஒவ்வொரு அரச நிறுவனமும் தங்களது சொந்தச் செலவுக்கான நிதியை ஈட்டிக்கொள்ள வேண்டுமென வலியுறுத்தினோம்.

இந்த நிலை அனைத்து துறைகளையும் பாதித்தது. என்னை திட்டித் தீர்த்தனர். நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைய அனுமதிப்பதா அல்லது அவதூறுகளை ஏற்றுக்கொள்வதா என்பதை நான் தீர்மானிக்க வேண்டியிருந்தது. ஆனால் இந்தப் பொறுப்பில் இருந்து விலக முடியாத நிலைமை இருந்தது. அந்தச் செயற்பாடுகளுக்கு அனைத்து அமைச்சர்களும் ஆதரவு வழங்கினர்.

அப்போது, அரச நிறுவன மறுசீரமைப்பு திட்டத்துக்கு சிலர் எதிர்ப்பு தெரிவித்தனர். இன்று நாட்டின் மின் மற்றும் எரிபொருள் கட்டணங்கள் உலக சந்தையின் விலைக்கு அமைவாக உள்ளன. மேலும், ஏனைய கூட்டுத்தாபனங்களுக்கும் பணம் வழங்குவதை நிறுத்தினர்.

நாங்கள் தற்போது ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸ் நிறுவனத்திற்கு மட்டுமே பணம் செலுத்த வேண்டியுள்ளது. இந்த ஆண்டு இறுதிக்குள், அந்த கட்டண நடவடிக்கைகளில் இருந்து விடுபட ஆளும் தரப்பு எதிர்பார்க்கிறது. அதனால் எஞ்சும் தொகையை நாட்டின் கல்வி மற்றும் சுகாதாரத்திற்காகப் பயன்படுத்தமுடியும்.

இந்த நடவடிக்கைகளைச் செயல்படுத்தும்போது பல விமர்சனங்கள் எழுந்தன. அப்போது, நஷ்டத்தில் இயங்கும் நிறுவனங்களை நமது தேசிய சொத்தாக கருதுவதா அல்லது இளைஞர்களை தேசிய சொத்தாக கருதுவதா என்ற கேள்வி எழுந்தது. நஷ்டத்தில் இயங்கும் நிறுவனங்களைப் பாதுகாப்பதா அல்லது கல்வி மற்றும் சுகாதாரத்திற்கு பணம் கொடுப்பதா என்பதை முடிவு செய்ய வேண்டும்.

இந்த புதிய வேலைத் திட்டங்கள் மூலம் அடுத்த இரண்டு அல்லது மூன்று வருடங்களில் புதிய பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்தி நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல ஒன்றுபடுமாறு அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறேன் என்றார்.

## அரசமைப்பின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிப்புக்கு அமைய சட்டமூலம் நேற்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 83 ஆம் உறுப்புரையானது, அதன் (ஆ) எனும் பந்தியில் ஆறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட என்னும் சொற்பதத்துக்கு பதிலாக ஐந்து ஆண்டுகள் எனும் சொற்பதத்தை சேர்க்கும் வகையில் இத்திருத்தம் உருவாக்கப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கியதாக கருதப்படும் என வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவிப்பு எதிர்வரும் வாரம் உத்தியோகபூர்வமாக வெளியிடவுள்ள நிலையில் ஜனாதிபதி தேர்தலை பிற்போடுவதற்கும் அல்லது தேர்தல் பணிகளை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் இந்த சட்டமூலம் கொண்டு வரப்பட்டுள்ளதாக எதிரக்கட்சியினரும், சிவில் அமைப்பினரும் கடும் எதிர்ப்பை வெளிபபடுத்துகின்றனர்.

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள 22 ஆவது திருத்த வரைவினை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவை பெறுவதுடன் மக்கள் வாக்கெடுப்புக்கும் செல்லவேண்டும்.

ஜனாதிபதி தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் ஜனாதிபதியின் பதவி காலத்துடன் தொடர்புடைய ஒரு விடயத்துக்கு சர்வஜன வாக்கெடுப்பு கோரும் போது ஜனாதிபதி தேர்தலுக்கான பணிகள் நெருக்கடிக்குள்ளாகும் என எதிர்தரப்பினர் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

22 ஆவது திருத்த சட்டமூலம் எதிர்வரும் வாரம் முதலாம் வாசிப்புக்காக பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சட்டமூலம் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் 14 நாட்களுக்குள் இலங்கை பிரஜைகள் எவரும் சட்டமூலத்தை சவாலுக்குட்படுத்தி உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# தமிழர் பண்பாட்டை உள்வாங்காமல் தமிழ்த் தேசிய அரசியல் வலுப்பெறா

## ஆடிப்பிறப்பு விழாவில் பொ.ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு

ஒரு தேசிய இனத்தை மற்றைய தேசிய இனங்களில் இருந்து வேறுபடுத்திக்காட்டும் விடயங்களில் அதன் பண்பாடும் ஒன்று. இது வெறும் அடையாளம் அல்ல. ஓர் இனத்தின் தேசியத்தைக் கட்டமைப்பதில் அந்த இனத்தின் வாழ்புலம், பேசுகின்ற மொழி எந்த அளவுக்கு முக்கியமானதோ அந்த அளவுக்குப் பண்பாடும் இன்றியமையாதது.

ஆனால், தமிழ்த் தேசியக் கட்சிகள் வாழ்புலத்துக்கும் மொழிக்கும் கொடுக்கும் முக்கியத்துவத்தைப் பண்பாட்டுக்குக் கொடுப்பதில்லை. பண்பாட்டை உள்வாங்காமல் தமிழ்த்தேசிய அரசியல் வலுப்பெறாது என்பதை எமது தலைவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்தேசியப் பசுமை இயக்கத்தின் ஆடிப்பிறப்புவிழா கடந்த புதன் கிழமை அராலி குலனையூரில் நடைபெற்றது. இவ்விழாவுக்குத் தலைமை வகுத்து உரையாற்றும்போதே பொ.ஐங்கரநேசன் இவ்வாறு சுட்டிக்காட்டினார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் –

தைப்பொங்கலைப் போன்றே ஆடிப்பிறப்பும் தமிழ் மக்களின் வாழ்வியற் பண்பாட்டை அறிவுபூர்வமாக வெளிப்படுத்துகின்ற ஒரு பண்டிகை. இன்று ஆடிப்பிறப்புக் கொண்டாட்டங்கள் தமிழ் மக்களிடையே அருகிவிட்டது. ஆடிப்பிறப்பு நாளில் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கிய காலம் ஒன்று இருந்தது.

இப்போது 'ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம்தோழர்களே' என்றநவாலியூர்சோமசுந்தரப்புலவரின் பாடல் மாத்திரம்தான் மிஞ்சியுள்ளது. பண்பாட்டுச் செயற்பாடுகளுக்காக வெள்ளி, ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார்கல்விநிறுவனங்களிடம்விடுமுறையைக்கோருகின்ற நாம் ஆடிப்பிறப்பு விடுமுறையை மீளப்பெறுவதற்கும் முயற்சிக்க வேண்டும்.

சுதந்திரத்துக்குப் பின்னரான இலங்கையில் தமிழ்த்தேசிய அரசியலின் காலத்தை தலைமைத்துவ அடிப்படையில் ஜி.ஜி பொன்னம்பலம் காலம், எஸ்.ஜே.வி செல்வநாயகம் காலம், அமர்தலிங்கம் காலம், பிரபாகரன் காலமென்று ஆய்வாளர்கள் பிரித்து வைத்திருக்கின்றனர்.


இவர்களில் ஆயுதப்போராட்டத்தை முன்னெடுத்த பிரபாகரன் மட்டுமே தமிழ்த்தேசிய அரசியலை வலுப்படுத்துவதில் கலை, இலக்கியங்களினதும் பண்பாட்டினதும் வகிபாகம் குறித்து ஆழமான புரிதலைக் கொண்டிருந்தார். கலை, பண்பாட்டுக்கழகம் என்று தனியான ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டுபோராளிகளின்பாசறைகளில்மாத்திரமல்லாது பொதுமக்களிடையேயும் கலை, இலக்கிய, பண்பாட்டுச் செயற்பாடுகள் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டன.

தமிழ்ப்பண்பாடு இன்று மும்முனைத் தாக்குதல்களுக்கு ஆளாகியுள்ளது. ஒரு புறம் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தால் ஒடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இன்னொரு புறம்



உலகமயமாக்கலால் அதன் தனித்துவத்தை இழந்து கொண்டிருக்கிறது. மறுபுறம், எமது அக்கறையின்மையாலும் தொன்று தொட்டு நாம் கடைப்பிடித்து வந்த பண்பாட்டு விழுமியங்கள் கைவிடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தமிழ்த்தேசிய இனத்தின் தரத்தை மதிப்பீடு செய்வதற்கான அளவுகோல்களில் பண்பாடும் ஒன்று என்பதை உணர்ந்து மக்களிடையேபண்பாட்டுச்செயற்பாடுகளைஒருபேரியக்கமாக முன்னெடுப்பதற்கு எமது தலைவர்கள் முன்வரவேண்டும் என்றும் தெரிவித்தார்.(05)

# மொழி உரிமையை மீறும் போக்குவரத்து பொலிஸார்



இலங்கை நாட்டில் வாழும் பிரஜைகளுக்கானஅடிப்படைஉரிமைகள் பற்றி யாப்பில் சொல்லப்பட்டுள்ள போதிலும் வடகிழக்கில் கூடுதலாக அது மறுக்கப்படுகிறது.போக்குவரத்து பொலிஸார் தண்டப் பண சிட்டையில் தமிழ் பேசும் சிங்கள மொழி தெரியாத பகுதிகளில் வசித்து வந்த போதிலும் சிறுபான்மை மக்களுக்கு தெரியாத மொழியில் தான் எழுதிகிறார்கள் இது அடிப்படை உரிமை மீறல்களில் ஒன்றாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சிங்கள மொழியில் மாத்திரமே குற்றத்தின் தன்மை மற்றும் பெயர் முகவரிபோன்றனஎழுதுவதால்மொழி உரிமை மீறப்படுகிறது அடிப்படை உரிமை மீறப்படுகிறது ஆரம்பமே பிழையாக உள்ளது எப்படி ஏனைய சிறுபான்மைசமூகத்தின்உரிமைகளை வென்றெடுக்க முடியும். வட கிழக்கில் அதிகமாக தமிழ் பேசுவோர் உள்ள போதிலும் சிங்கள மொழி மூலமான தண்டப் பணச் சிட்டை போக்குவரத்து பொலிஸாரால் வழங்கப்படுகிறது. கிண்ணியா குட்டிக்கராச்சி சந்தியில் திருகோணமலை போக்குவரத்து பொலிஸ் பிரிவினால் இவ்வாறான அடிப்படைமொழிஉரிமை 2024.07.16 மீறப்பட்டுள்ளதுடன் இதனை பிஎஸ் 71687 எனும் இலக்கமிடப்பட்ட போக்குவரத்து பிரிவின் பொலிஸ் அதிகாரி ஒருவர் சிங்கள மொழியில் எழுதி விட்டு கிண்ணியா பொலிஸ் என்பதை மாத்திரம் ஆங்கிலத்தில் எழுதியுள்ளார் இது அடிப்படை உரிமை மீறல் என உரிய மோட்டார் சைக்கிள் உரிமையாளர் தெரிவித்துள்ளார். சட்ட ரீதியாக கடமையாற்றுபவராக இருந்தால் கடமை நிமித்தம் வீதியில் நிறுத்தும் போது வெள்ளை நிற தலைக் கவசம் அல்லது வெள்ளை நிற பொலிஸ் தொப்பி அணிய வேண்டும் இதை கூட அணியாமல் கடமையில் அவர்களேசட்டத்தையும்மீறிஅடிப்படை உரிமையையும் மழுங்கடிக்கச் செய்கிறார்கள்.

இதுதொடர்பில்உரியஉயரதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறும் சம்கந்தப் பட்டவர்களிடம் கோரிக்கை விடுக்கப் படுகிறது.(05)

# உயர்தர கணித விஞ்ஞான பிரிவு மாணவர்களது பௌதீகவியல் சோதனை கருத்தரங்கு ஒலுவிலில்

## தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பார்வையிட்டார்







(எஸ்.அஷ்ரப்கான்)

அக்கரைப்பற்று கல்வி வலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட உயர்தர, கணித விஞ்ஞான பிரிவு மாணவர்களின் பௌதீகவியல் பரிசோதனை கருத்தரங்கு ஒலுவில் அல்-ஹம்றா மகா வித்தியாலயத்தில் பாடசாலையின் அதிபர் அஷ்ஷெய்க் யூ.கே. அப்துர் ரஹீம் (நளீமி) தலைமையில் நடைபெற்றது.

மூன்று நாட்கள் நடைபெற்ற இந்நிகழ்வில் நேற்று (வெள்ளிக்கிழமை) இறுதி நாள் நிகழ்வில் ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ரமீஷ் அபூபக்கர் கலந்து கொண்டு பார்வையிட்டதுடன், மாணவர்களின் விளக்கங்களை செவிமடுத்து மாணவர்களுக்கு பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

இங்கு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியர் ரமீஷ் அப்துல்லாபாடசாலையின் அதிபர்யு.கே. அப்துர்ரஹீம் மற்றும் பிரதி அதிபர் எம்.ஏ. கமருன் நிஷா, உதவி அதிபர்களான ஐ.அஹமட் ஜூமான், ஜே.வஹாப்தீன் உட்பட பாடசாலையின் கணித, விஞ்ஞானப் பிரிவு ஆசிரியர்களான எம்.ஏ.சி.எம். இஹ்சாஸ், எம்.எஸ்.உஸாமா, எம்.ஐ.முஸ்பிரா ஆகியோரும் கலந்து கொண்டனர்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# ரணிலின் நோக்கம்தான் என்ன?

அரசமைப்பின் 22ஆவது திருத்தத்தைக் கொண்டு வருவதற்கான முன்னேற்பாடாக அது அரசிதழ் (வர்த்தமானி) மூலம் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இந்த அறிவித்தலை விடுக்க வேண்டாம் என்று நீதி அமைச்சர் உத்தரவிட்டிருந்தபோதும் அரசுத் தலைவர் தனது அதிகாரங்களைப் பயன்படுத்தி அதனை அறிவித்திருக்கின்றார்.

அரசமைப்பின் 83ஆம் உறுப்புரையின் பிரிவு டி அரசுத் தலைவரின் பதவிக் காலம் 6 வருடங்கள் என்று குறிப்பிடுகின்றது. ஆனால், 2015 கொண்டுவரப்பட்ட அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தின் கீழ் அரசுத் தலைவரின் பதவிக் காலம் 5 வருடங்களாகக் குறைக்கப்பட்டுவிட்டது. எனினும் 83ஆம் உறுப்புரையில் மாற்றங்களைச் செய்வதாயின் மக்களிடம் கருத்துக் கணிப்பு நடத்துவது கட்டாயம் என்பதால் அந்தக் காலத்தில் அதனை மாற்றுவதற்கு முயற்சி எடுக்கப்படவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது தெரவித்திருந்தார்.

முன்னாள் அரசுத் தலைவர் மைத்திரிபால சிறீசேன 19ஆவது திருத்தத்தின்படி, 5 வருட பதவிக் காலத்தை முடித்துக்கொண்டு 2019இல் அடுத்த அரசுத் தலைவர் தேர்தலை நடத்தியிருந்தார். அப்படியிருந்தும் அரசுத் தலைவரின் பதவிக் காலம் 5 ஆண்டுகளா அல்லது 6 ஆண்டுகளா என்ற தேவையற்ற சர்ச்சை ஒன்று தொடக்கப்பட்டுள்ளது. இ–து தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்குககளும்கூட தள்ளுபடி செய்யப்பட்டு அரசுத் தலைவரின் பதவிகக் காலம் 5 ஆண்டுகள்தான் என்பது உறுதிப்படுத்தப்பட்ட பின்னரும் 22ஆவது திருத்தத்தை அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கொண்டுவருவதற்கு ஒற்றைக் காலில் நிற்பது ஏன்?

தனது முயற்சி குறித்து சந்தேகம்கொள்ளத் தேவையில்லை என்று அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்றார். அதேநேரம் அரசமைப்பின் 22வது தித்தம் தொடர்பான அரசிதழ் அறிவிப்பை நீதி அமைச்சரையும் மீறி அரசுத் தலைவர் வெளியிட்டுள்ளார்.

அரசுத் தலைவரின் இந்த முயற்சியை எதிர்க் கட்சிகள் கடுமையாகக் கண்டிக்கின்றன. சட்டத்தரணிகளின் ஒன்றிணைவு உட்படப் பல பொது அமைப்புக்களும் இந்த முயற்சியை சந்தேகக் கண்கொண்டே பார்க்கின்றன. இப்போது இந்த முயற்சி தேவையற்றது, மக்களைக் குழப்பும் விதத்தில் அமைந்துள்ளது என்கின்றன. ஆனால் அவை எதவற்றையும் காதில் போட்டுக்கொள்ளாமல் தொடர்ந்து அந்த முயற்சியை முன்னெடுப்பதற்கு அரசுத் தலைவருக்கு என்ன தேவை இருக்கின்றது?

தேர்தல் ஆணைக்குழு அடுத்த அரசுத் தலைவர் தேர்தலுக்கான நாளைக் குறிப்பதற்குத் தயாராகிவிட்ட நிலையில் இதுபோன்ற அரசமைப்புத் திருத்தத்திற்கான தேவை என்ன என்பதும் தெளிவுபடுத்தப்படவில்லை.

மக்களைஇவ்வாறுதொடர்ந்துகுழப்பத்தில்ஆழ்த்துவதன் நோக்கம் என்ன என்பதும் மர்மமாகவே இருக்கின்றது. உள்ளூராட்சித் தேர்தல்களைக் கடைசி நேரத்தில் நிதி இல்லை என்று கூறி ஒத்திவைத்ததைப் போன்று அரசுத் தலைவர் தேர்தலுக்கும் ஏதாவது நடந்துவிடுமோ என்கிற அச்சம் அரசுத் தலைவரின் தற்போதைய நகர்வுகளால் ஏற்படுவதைத் தவிர்க்க முடியவில்லை.

மக்களைக் குழப்பும் இதுபோன்ற முயற்சிகளைக் கைவிட்டு, அடுத்த அரசுத்தலைவர்தேர்தலைச்சிறப்பாகவும் பொறுப்பாகவும் நடத்துவதற்குரிய நடவடிக்கைகளை ரணில் விக்கிரமசிங்க எடுக்கவேண்டும். ஜனநாயகத்தை வெறும் வாய்களின் வழியே கட்டிக்காப்பதைவிட, அதனை அச்சுறுத்தாமல் இருப்பது முக்கியம்

# வாட்டி எடுக்கும் வறட்சி ; குழந்தைகளின் எதிர்காலம் கேள்விக்குறி



தென் ஆப்பிரிக்காவில் நிலவும் கடும் வறட்சி லட்சக்கணக்கான குழந்தைகளின் கல்வியைக் கடுமையாகப் பாதிக்கிறது. குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதற்கு பதிலாக அவர்களது வீடுகளில் இருந்து வருகிறார்கள். வறட்சியால் எப்போதும் ஆப்பிரிக்கா கண்டம் கடுமையாகப் பாதிக்கப்படுகிறது. அதிலும் குறிப்பாக, தென் ஆப்பிரிக்காவில் உள்ள நாடுகளின் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது.



எல்நினோ காரணமாக கடந்த ஓராண்டுக்கும் மேலாக உலகளவில் வானிலையில் மிகப் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. வானிலை மட்டுமின்றி பருவநிலை மாற்றம் மிகப் பெரிய அபாயமாக உருவெடுத்துள்ளது. பருவநிலை மாற்றத்தால் உலக நாடுகள் பலவும் பாதிப்புகளை சந்தித்து வந்தாலும், மிகவும் மோசமான பாதிப்பினை ஆப்பிரிக்க நாடுகளே சந்திக்கின்றன. வறட்சி, விளைச்சல் பாதிப்பு போன்றவை ஆப்பிரிக்க நாட்டு மக்களை குறிப்பாக குழந்தைகளை பல நேரங்களில் பசியின் பிடியிலேயே வைத்துள்ளது.

ஆப்பிரிக்கமக்கள்பலரும்தங்களதுகண்முன்னே ஒரு தலைமுறை அழிவுக்குள்ளாவதை பார்த்து வருகின்றனர். ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான ஜிம்பாப்வேவின் வடகிழக்கு பகுதியில் முட்ஸி மாவட்டம் அமைந்துள்ளது. அந்த மாவட்டத்தில் உள்ள மக்களுக்கு விளை பயிர்கள் அவர்கள் உயிர்வாழத் தேவையான மிக முக்கிய ஆதாரமாக விளங்குகிறது. விளைச்சலில் பாதிப்பு ஏற்பட்டால், அவர்களது எதிர்காலமும் கேள்விக்குறிதான். விளைச்சல்பாதிக்கப்பட்டால்அவர்களதுவாழ்வாதாரம் மற்றும் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்படும். அவர்களுக்கு வருமானம் என்பது இல்லாமல் போகும்.

குடும்பத்துக்கு வருமானம் இல்லாதபோது, குழந்தைகளை 25 டொலர்கள் செலுத்தி பள்ளியில் சேர்ப்பது மற்றும் அவர்களுக்கான சீருடையை வாங்கிக் கொடுப்பது எல்லாமும் அந்த மக்களின் சக்திக்கு மீறியதாக மாறிவிடுகிறது. இதனால், அவர்கள் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்புவதை நிறுத்திவிடுகின்றனர். குழந்தைகளுக்கு அடிப்படைக் கல்வி என்பது ஒருபோதும் கிடைக்காத சூழலே நிலவுகிறது. அப்படியே குழந்தைகள் பள்ளிக்குச் சென்றாலும், அவர்களுக்கு மதிய உணவு என்பது கிடையாது. உணவின்றி குழந்தைகள் பள்ளியில் இறக்க நேரிடும் அவலநிலையும் உள்ளது. குடும்பங்கள் பலவும் ஒருவேளை உணவை மட்டும் உட்கொண்டு வாழ்ந்து வருகின்றன.

எல்நினோ விளைவால் குழந்தைகளே அதிக அளவில் பாதிப்புக்குள்ளாகின்றனர். எல்நினோவால் தென் மற்றும் கிழக்கு ஆப்பிரிக்காவில் பகலில் அதிக அளவில் வெப்பம் நிலவுகிறது. எல்நினோ விளைவால் ஏற்படும் திடீர் வெள்ளப் பெருக்கும் ஆப்பிரிக்க மக்களை வஞ்சிக்கிறது. 60 சதவிகித ஜிம்பாப்வே மக்கள் விவாசயத்தினை நம்பியே இருப்பதால், அவர்களது வாழ்வாதாரம் கேள்விக்குறியாக மாறிவிடுகிறது.

ஜிம்பாப்வேவில் 580,000 குழந்தைகள் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்படும் அபாயம் இருப்பதாக ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் அமைப்பு எச்சரித்துள்ளது. எல்நினோ விளைவு பொருளாதார கடினங்களோடு, கொலரா போன்ற நோய்கள் பரவவும் காரணமாக அமைகிறது.

குழந்தைகளின்கல்விமிகப்பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. பள்ளிக்குச் சென்று கல்வி கற்பது எட்டாக் கனியாக மாறியுள்ளது. பள்ளியிலிருந்து இடைநிற்கும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. குழந்தைகள் வேலைக்கு செல்லும் கட்டாயத்துக்கு ஆளாகின்றனர். பள்ளிகளில்தண்ணீர் பற்றாக்குறைநிலவுவதால்பதின்பருவ பெண் குழந்தைகள் மாதவிடாய் காலங்களில் மிகவும் சிரமத்திற்கு ஆளாகின்றனர்.

அதன் காரணத்தினால் அவர்கள் பள்ளிக்குச் செல்வதை தவிர்த்து விடுகின்றனர். மேலும், பெற்றோர்கள் வேலைக்குச் செல்லும்போது, வீட்டில் உள்ள குழந்தைகளை கவனித்துக் கொள்வதற்காகவும் அவர்கள் பள்ளிப் படிப்பை இடையிலேயே கைவிடும் நிலை ஏற்படுகிறது. பொருளாதார சுமைகள் காரணமாக படிப்பை பாதியில் நிறுத்தி பெண் குழந்தைகள் திருமணம் செய்து கொடுக்கப்படுகின்றனர்

ஜிம்பாப்வேவில் உள்ள 20 லட்சம் குழந்தைகளின் கல்வியை அங்கு நிலவும் கடும் வறட்சி கேள்விக்குறியாகவே வைத்துள்ளது. இதற்கு முன்பாக 2015 - -2016 ஆம் ஆண்டு ஏற்பட்ட எல்நினோ விளைவினால், 45,000-க்கும் மேற்பட்ட குழந்தைகள் பள்ளிப் படிப்பை கைவிட்டனர். ஜிம்பாப்வே மட்டுமின்றி அதனைச் சுற்றியுள்ள நாடுகளும் இதுபோன்ற வானிலை மற்றும் பருவநிலை மாற்றங்களால் கடுமையாக பாதிக்கப்படுகின்றன.



குழந்தைகள் பள்ளிக்குத் தொடர்ச்சியாக வருவதை உறுதி செய்ய ஜிம்பாப்வே அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. பள்ளிக்கு வரும் குழந்தைகளுக்கு குறைந்தபட்சம் ஒருவேளை உணவு வழங்குவது, குழந்தைகளின் கல்விக்காக நிதியுதவி செய்வது போன்ற விஷயங்களை அரசு முன்னெடுத்துள்ளது. குழந்தைகளின் கல்வி தொடர்பான விழிப்புணர்வு பரப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இயற்கையினால் பாதிப்புக்குள்ளாகும் லட்சக்கணக்கான ஆப்பிரிக்க குழந்தைகளின் கல்விக்கு என்று விடிவுகாலம் பிறக்குகமோ? காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

# கடல் மீன்களின் விலைகள் வீழ்ச்சி



(பாறுக் ஷிஹான்)

திடீர்காலநிலைமாற்றம்காரணமாக







அதிகளவான கீரி மீன்கள் அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிராந்திய கடற்கரைகளில் பிடிபடுகின்றன.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் 3 வகையான மீன்களான வளையா, சூரை, கிளவல்லா மீன்கள் என கரை வலைகள்மூலம்பிடிக்கப்பட்டுபலலட்சம் வரை விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு மருதமுனை மற்றும் கல்முனை சாய்ந்தமருது பகுதிகளில் கீரி இன மீன்கள் நேற்று அதிகளவாக கரைவலைகளுக்கு பிடிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

குறித்த கீரி மீன்களின் பெறுமதி ஒரு கிலோ சுமார் 300 முதல் 400 வரை விற்பனை செய்யப்படுகின்றன.

தற்போது மருதமுனை கல்முனை கடற்கரையில் கரை வலை மற்றும் ஆழ்கடல் மீன்பிடி தூண்டில் என்பன தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்ற நிலையில் கரைவலை மீனவர்களுக்கு இவ்வாறான சிறிய பாரிய மீன்கள் தொகுதியாக பிடிபடுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை, சாய்ந்தமருது பிரதேச கடற்கரையோரங்களில் கெலவல்லா, வலயா போன்ற மீன்கள் விற்பனை செய்யப்படுவதுடன் ஆர்வத்துடன் பொதுமக்கள் கொள்வனவில் ஈடுபட்டுள்ளனர்.

இன்று வலயா ஒரு கிலோ 400 ரூபா தொடக்கம் 500 ரூபா வரையும் கெலவல்லா ஒரு கிலோ 1,000 ரூபா என்ற விலையில் விற்பனை செய்வதைக் காணக்கூடியதாக இருந்தது.

ஆழ்கடல்மீன்பிடிக்குச்செல்பவர்கள் இவ்வாறான மீன்களை எடுத்து வந்து விற்பனை செய்கின்றனர். (05)

# மாணவர் கற்றலுக்கான உதவிகளை வழங்கி வைத்தார் குகதாஸன் எம்.பி.





(ஹஸ்பர் ஏ.எச்)

திருக்கோணமலைமாவட்டத்திலிருந்து ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் தேர்வுக்குத் தோற்றும் மாணவர்களது பெறுபேறுகளை உயர்த்தும் நோக்கோடு மூதூர் கோட்டத்தில் உள்ள இருதயபுரம், குச்சவெளி கோட்டத்தில் உள்ள கும்புறுபிட்டி, நாவற் சோலை ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கு ஒவ்வொன்றும் தலா 1930 ரூபா விலையான ஆற்றல் என்னும்புலமைப்பரிசில்தேர்வுவழிகாட்டி நூல்கள் நேற்று (வெள்ளிக்கிழமை) திருக்கோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத்தால் வழங்கப்பட்டது.

இந்நூல்களை திருக்கோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவரும் திருக்கோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கதிரவேலு சண்முகம் குகதாசன்அவர்களால்வழங்கிவைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கனடா திருகோணமலை நலன்புரி சங்கப் பொருளாளர் இலக்ஷ்ம வாசன் இலக்ஷ்மபெருமாள்மற்றும்திருக்கோணமலை மாவட்ட நலன்புரிச் சங்க செயலாளர் கணபதிப் பிள்ளை சிவானந்தம் ஆகியோர் கலந்து கொண்டனர்.(05)

# திருமலை அருள்மிகு மாதுமை அம்பாள் ஆடிப்பூர உற்சவம்

(ஹஸ்பர் ஏ.எச்)

வரலாற்று சிறப்பு மிக்க திருகோணமலை அருள்மிகு கோணேஸ்வரப் பெருமானின் தேவியார் மாதுமை அம்பாளின் சந்நிதியில் ஆடிப்பூர பிரமோற்சவம் மங்களகரமான குரோதி வருடம் ஆடித்திங்கள் 13 ஆம் நாள் (29.07.2024) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் (துவஜாரோகணம்) ஆரம்பமாகி ஆடிமாத பூர நட்சத்திரத்தை (07-08-2024) தீர்த்தோற்சவமாகக்கொண்டு பத்து நாள்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

அபிஷேகம் காலை 08.00 மணி, மாலை 4.00 மணி பூசை காலை 10.00 மணி, மாலை 5.00 மணி. கொடித்தம்ப பூசை காலை 10.30 மணி, மாலை. 5.45 மணி.வசந்தமண்டப பூசை - காலை 11.00 மணி, மாலை 6.15 மணி. தொடர்ந்து -

உள்வீதி மதியம் 12.00 மணிக்கும், இரவு உள்வீதி, மற்றும் வெளிவீதி உலா 07.00 மணிக்கும் இடம்பெற்றுஅத்துடன் திருவிழா இனிதேநிறைவுறும். இரதோற்சவம் 06-08-2024 செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு இடம் பெறும்.

தீர்த்தோற்சவம் 07-08-2024 புதன்கிழமை காலை ஆலயத்திலிருந்து அம்பாள் புறப்பட்டு காலை 7 மணிக்கு பாபநாசதீர்த்தக் கிணற்றில் தீர்த்தம் இடம் பெற்று தீர்த்தோற்சவத்தின் பின் ஆலயத்தில் ஆடிப்பூர ருதுசாந்தி நடைபெறும்.(05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee
Chikna Fried Rice with
Vegetable
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# சிறப்பாக நடைபெற்ற சுவாமி விபுலானந்த அடிகளாரின் 77ஆவது மகா சமாதி தினம்



(வி.ரி. சகாதேவராஜா)

உலகின் முதல் தமிழ் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் 77 ஆவது மகாசமாதி தின நிகழ்வும், அடிகளாரின் துறவற நூற்றாண்டு விழா தின பதாதைதிரை நீக்கதிறப்பு விழாவும் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை அவர் அவதரித்த காரைதீவில் மிகவும் சிறப்பாக நடைபெற்றன.

காரைதீவு விபுலாநந்தர் ஞாபகார்த்தப் பணி மன்றத்தினர் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையோடு இந் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர்.

முன்னதாக காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியிலிருந்து சுவாமிகளின் திருவுருவச் சிலை தாங்கிய மாணவர்களின் ஊர்வலம் கண்ணகை அம்மன் ஆலயம் வரை நடைபெற்றது.

கண்ணகை அம்மன் ஆலய முச்சந்தியில் அடிகளாரின் திருவுருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து பின்னர் துறவற நூற்றாண்டு விழா தின பதாதை திரை நீக்க திறப்பு விழாவும் இடம் பெற்றது.



பிரதம அதிதியான அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ.ஜெகராஜன், சிறப்பு அதிதியான காரைதீவு பிரதேச செயலாளர் திருமதி ராகுலநாயகி சஜிந்ரன் உள்ளிட்ட அதிதிகள் கலந்து கொண்டு சுபவேளையில் அப் பதாதையை திறந்து வைத்தனர்.

சுவாமிகளின்‘வெள்ளை நிற மல்லிகையோ.. ’ என்ற பாடல் இசைக்க ,அதிதிகளால் சுவாமிகளின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டது.

இது சுவாமி பிறந்த காரைதீவு மண்ணில் நிறுவப்படும் துறவற நூற்றாண்டு விழா முதலாவது பாதையாகும். இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ய.அநிருத்தனனின் வழிகாட்டலில் இந்நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

சிலை திறப்பு விழாவின் பின்னர், அங்கிருந்து அதிதிகள் பாடசாலை மாணவர்கள் மற்றும் பிரமுகர்கள் ஊர்வலமாக சுவாமி விபுலாநந்தர் மணிமண்டபத்தை அடைந்ததும், அங்குபணிமன்றத்தின்தலைவர்சோ.சுரநுதன்தலைமையில் 77 ஆவது ஆண்டு மகா சமாதி தின வைபவம் ஆரம்பமாகியது.

சுவாமிகளின்‘வெள்ளை நிற மல்லிகையோ.’ என்ற பாடல் இசைக்க ,அதிதிகளால் சுவாமிகளின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டன.அடிகளாரின் இல்லத்தில் விசேட பூஜையும் இடம் பெற்றது.

அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ. ஜெகராஜன் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்..

நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக காரைதீவு பிரதேச சபை செயலாளர் அ.சுந்தரகுமார், சம்மாந்துறை வலய உதவி கல்வி பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா உள்ளிட்ட அதிபர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

சுவாமி விபுலாநந்தர் கற்கை நிலைய மாணவர்களின் கலை நிகழ்வுகள் சிறப்புரைகள், பாராட்டுப் பரிசில்கள் வழங்கும் நிகழ்வுகள் ஆகியவை இடம்பெற்றன .

நிகழ்வின் ஞாபகார்த்தமாக யாழ்ப்பாணம் இணுவில் முருக ஜீவ அறக்கட்டளை நிறுவனத்தின் ஏற்பாட்டில் பதாதை திறந்து வைக்கப்பட்டதுடன் 100 வெள்ளை மல்லிகை செடிகள் அதிதிகளால் நடப்பட்டன.

ஒட்டுமொத்த நிகழ்வையும் ஏற்பாடு செய்த பணிமன்ற செயலாளர் கு.ஜெயராஜி நன்றி தெரிவித்து உரையாற்றினார். கலாசார உத்தியோகத்தர் என்.பிரதாப் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்.

மேலும்,பாடசாலை அதிபர்கள், நற்பணிமன்ற நிறுவுனர்கள், அறங்காவலர் ஒன்றிய நிர்வாகத்தினர் உள்ளிட்ட பல பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர். (05)



காலைக்கதிர் Kalaikkathir

## மனிதவள ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தயாரிக்கப்பட்டது. ஆனால் டொலரின் பெறுமதி 300 ரூபாயாக இருக்கும்போது விலை நிர்ணயம் செய்கிறோம். எனவே, ஒரு நடுத்தர வர்க்க நிர்வாகியின் இருப்பு எப்படி இருக்கும்என்பதைநீங்கள்கற்பனை செய்யலாம்.

நாங்கள் இதுவரை செய்ததெல்லாம், இறையாண்மை கொண்ட அரசுகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகிய இரு தரப்பிலுமுள்ள கடன் வழங்குநர்களினால் எமக்கு நிவாரணங்கள் வழங்கிய பிறகு எம்மால்கடனைத்திருப்பிச்செலுத்த முடியும்என்பதைஉறுதிப்படுத்துவது மாத்திரம் தான். ஆனால் கடனை எப்படி திருப்பிச் செலுத்துவது, அதற்கான பணத்தை எங்கிருந்து பெறுவது? அந்நியச்செலாவணியை எவ்வாறு பெறுவது? என்பதிலும் கவனம் செலுத்த வேண்டும்

நான் பொருளாதார பரிமாற்றச் சட்டத்தைக் கொண்டு வந்தபோது, பாராளுமன்றத்தில் ஒரு தரப்பினர் நீதிமன்றத்திற்குச்சென்று, இறக்குமதி சார்பொருளாதாரமொன்றுஅவசியம் என்பதால் அதை நிராகரிக்க வேண்டும் என்று கோரினார்கள். இறக்குமதி சார் பொருளாதாரம் என்று ஒன்று இருக்கிறது என்ற எண்ணத்தை முதலில் அகற்ற வேண்டும். நாம் முதலில் மிகவும் போட்டி நிறைந்த நவீன ஏற்றுமதி பொருளாதாரத்திற்கு நம்மை தயார்படுத்த வேண்டும்.

இப்போது அதற்கான வாய்ப்பு வந்துள்ளது. பொருளாதாரத்தில் ஒரு அடிப்படை மாற்றம் ஏற்பட வேண்டும் என்பதை நம் நாட்டில் பலர் உணர்ந்துள்ளனர். எனவே, அவர்களுக்குத் தேவையான துறைகள் தொடர்பான அறிவை அவர்களுக்கு வழங்க முடியும்.

நவீன முறையில் விவசாயம் செய்யமூன்றுமுதல்நான்குஇலட்சம் ஏக்கர்நிலம்உள்ளது. விவசாயத்தை நவீனப்படுத்தக்கூடிய கிராமப்புற மக்களுக்குச் சொந்தமான நிலமும் எங்களிடம் உள்ளது.

சுற்றுலாத் துறையைப் போலவே, தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழில்களுக்கும்தன்னியக்கத்தைப் பயன்படுத்த மக்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும். அதற்கான வாய்ப்புஉள்ளது. இந்தியாவுடனான பொருளாதார ஒத்துழைப்பு பற்றி இங்கு பேச விரும்புகிறேன்.

இந்தியாவுடன்ஒருங்கிணைந்த மின்இணைப்புகட்டமைப்புகுறித்து ஒரு முடிவை எட்டியுள்ளோம். ஆனால்அனைத்துஅம்சங்களையும் விடநில இணைப்பு முக்கியமானது.

ஆந்திரா, தெலுங்கானா மாநிலங்களுடன் இணைந்து மகாராஷ்டிரா, குஜராத் மாநிலங் களுடன் தமிழகமும் போட்டி யிடுகிறது. இந்தப் போட்டியில் இலங்கை, திருகோணமலை மற்றும்கொழும்புதுறைமுகங்களை பயன்படுத்திக்கொள்ள முடியும். இவ்வாறுவிரிவுபடுத்தப்படவேண்டிய பல துறைகளை அடையாளம் கண்டுள்ளோம். மேலும்வெளிநாட்டு முதலீடுகளுக்கும் அதை விட உள்ளூர் முதலீடுகளுக்கும் வாய்ப்பானதாக இருக்க வேண்டும்.

பெருமளவிலும், சிறிய அளவிலும் தனியார் துறையை விரிவுபடுத்த வேண்டும். அது தவிர வேறு வழியில்லை. இந்த கட்டமைப்பிற்குள், நமது மனித மூலதனத்தைக்கட்டியெழுப்புவதை நாம் பார்க்க வேண்டும். நிதி மூலதனம் இல்லாமல் மனித மூலதனத்தைஉருவாக்கமுடியாது. எனவே இந்த அணுகுமுறையை எடுக்க வேண்டும்.

நாம் முதலில் தொழில் மற்றும் தொழில்நுட்பத் துறையில் கவனம் செலுத்த வேண்டும். தொழில்முறைமற்றும்தொழில்நுட்ப நிறுவனங்களை செயற்படுத்தும் பல நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்கள் தேவைக்கு அதிகமாகவே எம்மிடம் உள்ளன. அதுபோன்று அமைச்சுகளும் இருக்கின்றன. ஆனால் இந்தத் துறைக்கு, பாடசாலைக் கல்விக்குப் பிறகு, பொறுப்பான ஒரு நிறுவனம் தேவை.

நாடு முழுவதும் சுமார் 700-800 பயிற்சி மையங்கள் உள்ளன. சுமார் 300 அரச தொழிற்பயிற்சிக் கல்லூரிகளை ஒருங்கிணைக்க அரசாங்கம் செயல்பட்டு வருகிறது. பின்னர் அவை புதுப்பிக்கப்பட்டு நவீனமயப்படுத்தப்படும். அதனைத் தான்நாம்செய்யவேண்டும்.பல்வேறு தரநிலைகளின் கீழ் இயங்கும் தொழில்நுட்பக் கல்லூரிகளை, உயர் தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவக் கல்லூரிகளாக மாற்றி, தொழில்நுட்பம் மற்றும் தொழில்சார் கற்கைகள் தொடர்பான பட்டங்களை அறிமுகப்படுத்தும் நிலைக்கு கொண்டுவர வேண்டும். பின்னர் நாம் ஹிஏஞ தகுதியை உயர்த்துவதற்கான பணிகளை ஆரம்பிக்கலாம்.

ஹிாகுதிகளை நாம் மறுபரிசீலனை செய்து, சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் அதனுடன் தொடர்புடைய பட்டங்களை வழங்கும் அவுஸ்திரேலிய தகுதிகளின் நிலைக்குதரம்உயர்த்தவேண்டும். அவுஸ்திரேலியாவிலிருந்து நாம் கற்றுக்கொள்ளக்கூடிய பல விடயங்களில் இதுவும் ஒன்றாகும். ஆசியாவின் முன்னேறிய நாடுகளைப் பார்க்கும்போது, அவை அனைத்தும் தொழில்சார் தொழில்நுட்பக் கல்வி மற்றும் உயர்கல்வியில் தங்கள் மூலதனத்தைக் கட்டியெழுப்புவதில் கவனம் செலுத்துகின்றன.

ஜப்பான், கொரியா, ஹொங் கொங், சிங்கப்பூர் என்று எடுத்துக் கொண்டால், அந்த நாடுகள் நாடுகள் முன்னிலையில் உள்ளன. எதிர்வரும் ஆண்டுகளில் சீனா, வியட்நாம், மலேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகளும் அந்த நிலையை எட்டும். ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் கத்தார் அந்த நிலையை எட்டியுள்ளன.

இதுவரை கட்டிடங்கள் மற்றும் சில உபகரணங்களை உள்ளடக்கியஉதவித்திட்டங்களைக் கேட்டுப் பழகிவிட்டோம். ஆனால் எதிர்காலத்தில்எமது முறைமையை வலுப்படுத்தவும் நவீனப்படுத்தவும் மட்டுமே வெளிநாட்டு உதவியைப் பெற வேண்டும். இவ்விடயத்தில் அவுஸ்திரேலியாவிடம் இருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பல்வேறுவிடயங்கள்இருக்கின்றன.

மனித மூலதனத்தை கட்டியெழுப்புவதற்கான தளமாக நாம் மாறலாம். மேலும், இந்தியா, பங்களாதேஷ், இலங்கையை உள்ளடக்கிய இந்தப்பிராந்தியத்தை அபிவிருத்தி செய்வதற்கு மனித வளத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும். மேலும் அனைத்து பிம்ஸ்டெக்நாடுகளும்ஒன்றிணைய வேண்டும்.

இலங்கையின் கல்வி முறையைக்கட்டியெழுப்ப இந்தநாடுகளின் ஆதரவைப்பெற வேண்டும். கல்வி வாய்ப்புகள் குறித்து 2021ஃ2022 இல் அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகராலயத்தால் ஏற்கனவே ஒருதிட்டஅறிக்கைதயாரிக்கப்பட்டது.

டீகின் பல்கலைக்கழகம், எடித் கோவன் பல்கலைக்கழகம், சிட்னி தொழில்நுட்பக் கல்லூரி ஆகியவை ஏற்கனவே இந்த நாட்டிற்கு வந்துள்ளன. இவ்வாறு, நம் நாட்டில் மேலும் சர்வதேச பல்கலைக் கழகங்கள் உருவாகி வருகின்றன. இத்துடன், அரச துறையில்பலபுதியஇலாபநோக்கற்ற பல்கலைக்கழகங்களைஅபிவிருத்தி செய்யவும் நாங்கள் பணியாற்றி வருகிறோம். அவற்றில் 04 தொழில்நுட்பபல்கலைக்கழகங்கள் உள்ளடங்கியுள்ளன. எனவே முதலில், தற்போதுள்ள முறைமையை மாற்ற வேண்டும். இரண்டாவதாக, கல்வி மற்றும் பயிற்சி முறையை வலுப்படுத்தத் தேவையான மறுசீரமைப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.' என்று தெரிவித்தார்.



## புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம்







கிளிநொச்சி இராமநாதபுரம் வயலூர் முருகன் ஆலயத்திற்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்ட நிகழ்வு நேற்று நண்பகல் 12மணி தொடக்கம் ஒரு மணி வரையுள்ள சுபவேளையில் சித்திரத்தேர் வெள்ளோட்டம் பக்திபூர்வமாக இடம்பெற்றது.

வயலூர் முருகன் ஆலயத்தின் வருடாந்தமகோற்சவம்நடைபெற்று வருகின்ற நிலையில் நாளை தேர் உற்சவம் இடம்பெறவுள்ளது. (05 - 316)

## பளை மத்திய கல்லூரியின் பரிசளிப்பு தினம் நேற்று

கிளிநொச்சி மாவட்ட பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்டபளைமத்தியகல்லூரி (தேசிய பாடசாலை)யின் பரிசளிப்பு தினம் நேற்;று இடம்பெற்றிருந்தது.

இந்த நிகழ்வு பளை மத்திய கல்லூரியின் மண்டபத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை 9.30மணியளவில் சிறப்பாக இடம்பெற்றிருந்தது.

குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக பேராசிரியர் .சி.சிறிசற்குணராஜா(துணைவேந்தர் , யாழ்ப்பாண பல்கலைக் கழகம் )மற்றும் திருமதி சி.சிறிசற்குணரஜா(சிரேஸ்ட விரவுரையாளர் ,மொழியல் துறை யாழ்ப்பாணம் பல்கலை கழகம்)சிறப்பு விருந்தினர்களாக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் இ.த.ஜெயசீலன் மற்றும் பிரதி கல்விப்பணிப்பாளர் ,(திட்டமிடல்)வலயக்கல்வி பணிமனை கிளிநொச்சி வடக்கு மற்றும் கௌரவ விருந்தினர்களாக நடேசபிள்ளை காந்தரூபன் மற்றும் அவரது துணைவியான ஸ்ரீமதி . சைலஜா காந்தரூபன் ஆகியோரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

பல்துறைகளில் பாடசாலைக்கு பெருமைசேர்த்தமாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றிருந்தது.

ஆரம்பநிகழ்வாகவிருந்தினர்கள் பாண்ட் இசை வாத்தியங்களுடன் மாலைஅணிவித்துவரவேற்கப்பட்டு மங்கள விளக்கேற்றத்துடன் நிகழ்வு ஆரம்பமானது. தொடர்ந்துவரவேற்பு நடனம் வரவேற்புரையுடன் தேசிய மற்றும் மாகாண மட்டங்களிலும் பலதுறைகளில் சாதித்த மாணவர்களுக்கு பரிசில்கள் மற்றும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தன. (05 - 113)



காலைக்கதிர் Kalaikkathir

# தொல்லியல் அகழ்வாய்வின் நிறைவு விழாவும் சான்றிதழ் வழங்கலும் ஆனைகோட்டையில்

பிரித்தானிய சமூக முன்னேற்ற மையத்தின் மரபுரிமை அலகின் நிதி பங்களிப்புடனும் யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் அனுசரணையுடனும் ஆனைக்கோட்டையில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வின் நிறைவு விழாவும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இன்று மாலை 3.30 மணிக்கு யாழ். பொதுசன நூலகத்திற்கு அருகில் உள்ள யாழ்ப்பாண பண்பாட்டு மையத்தில் நடைபெற உள்ளது .

யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் தலைவர் வாழ்நாள் பேராசிரியர் பரமு புஷ்பரட்ணத்தின் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சத்திர சிகிச்சை பேராசிரியரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் மருத்துவ பீடாதிபதியும் யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் உப தலைவருமாகிய ரவிராஜ் கலந்து கொள்ள உள்ளார்.

இவ் நிகழ்வின் முடிவில் ஆனைக்கோட்டை தொல்லியல் ஆய்வு தொடர்பான செய்தியாளர் சந்திப்பும் நடைபெற உள்ளது.

குறித்த நிகழ்வில் தொல்லியல் திணைக்கள அதிகாரிகள், துறைசார் வல்லுனர்கள் என பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(05)

# அட்டாளைச்சேனை தேசியப் பாடசாலைக்கு கதிரைகள் மாவட்ட செயலகத்தால் வழங்கல்

(எம்.எப்.நவாஸ்)

அட்டாளைச்சேனை தேசிய பாடசாலைக்கென சுமார் ஐந்தரை லட்சம் ரூபாய் பெறுமதியான கதிரைகள் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்திக்க அபேவிக்ரமவால் பாடசாலை அதிபர் பாயிஸிடம் உத்தியோகபூர்வமாக வியாழக்கிழமை கையளிக்கப்பட்டன.

இது அம்பாறை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் அனீஸின் (பழைய மாணவர் சங்க செயலாளர்) வேண்டுகோளுக்கிணங்க அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் இர்பான் ஊடாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபருக்கு வழங்கப்பட்ட கோரிக்கைக்கமைவாக வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் இர்பான், அம்பாறை மாவட்ட செயலக கணக்காளர், பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள்,மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

(05)

# பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டு பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன



(தில்சாத் பர்வீஸ்)

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குபன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவு திட்ட நிதிஒதுக்கீட்டின் மூலம் கொ;வனவுசெய்யப்பட்ட பொருள்களை உரிய சமூக அமைப்புகளுக்கு வழங்கும் நிகழ்வு வியாழக்கிழமை சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல். முஹம்மது ஹனீபா தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.எம் அஸ்லம்,கணக்காளர் எஸ்.எல். சர்த்தார் மிர்ஸா,அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம்.ரிஸ்வான், எம்.என்.எம் சசீர், உட்பட சங்க உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.(05)





# மூதூர் கங்கை பாலத்தில் பஸ் கவிழ்ந்து விபத்து

## 51 பேர் காயம்; 3 பேர் கவலைக்கிடம்





திருகோணமலைமட்டக்களப்பு பிரதான வீதியின் மூதூர்- கங்கை பாலம் அருகே தனியார் பேருந்து கவிழ்ந்து விபத்திற்குள்ளானதில் 51 ;நபர்கள் காயமடைந்துள்ளதுடன் மூவர் பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்களே இவ்வாறு காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றன. (05)


# வவுனியாவில் 4 பெண்கள் கைது விபச்சாரம் செய்த குற்றச்சாட்டு

வவுனியா, தேக்கவத்தைப் பகுதியில் விடுதி ஒன்றில் பொலிஸார் மேற்கொண்ட விசேட சோதனையின் போது விபச்சாரத்தில் ஈடுபட்டதாக 4 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையில் பொலிஸார் இரவு விசேட கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன்போது தேக்கவத்தைப் பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் சோதனை செய்த போது அங்கு முறையான அனுமதி யின்றி விபச்சாரத்தில் ஈடுபட்டதாக 4 பெண்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் வவுனியா மற்றும் காலி ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களாவர். மேலதிக விசாரணைகளின் பின் அவர்களை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (05 - 100)

# வவுனியாவில் உடைந்து வீழ்ந்த வீடு; அதிஸ்டவசமாகத் தப்பித்த இருவர்



வவுனியா, பூந்தோட்டம், சிறிநகர் பகுதியில் வீடு ஒன்று நேற்று(வெள்ளிக்கிழமை) உடைந்து வீழ்ந்த நிலையில் அதிஸ்டவசமாக இருவர் உயிர் தப்பியுள்ளனர்.

குறித்த வீட்டில் மதியம் கணவனும் மனைவியும் தங்கியிருந்துள்ளனர். இதன்போது வீடு திடீர் என்று உடைந்து வீழ்ந்தது. குறிப்பாக வீட்டின் பின்பக்க சுவர் மற்றும் கூரைப்பகுதி என்பன முற்றாக உடைந்து வீழ்ந்துள்ளது.

அனர்த்தம் இடம்பெற்ற போது கணவனும் மனைவியும் வீட்டிற்கு வெளியில் இருந்தமையால் பாரிய அனர்த்தம் ஒன்று தவிர்க்கப்பட்டது.

இதேவேளை, வவுனியா சிறிநகர் பகுதியில் 1996 ஆம் ஆண்டு பொதுமக்கள் குடியேற்றப்பட்ட நிலையில் 50 இற்கும் மேற்பட்ட வீடுகள் வசிப்பதற்கு தகுதியற்ற நிலையில் இருக்கின்றது. தமக்கான வீட்டுத்திட்டம் ஒன்றை வழங்குமாறு பல்வேறு தரப்புக்களிடமும் பலமுறை கோரிக்கை முன்வைத்துள்ள நிலையிலும் அது இதுவரை கிடைக்கப்பெறவில்லை என்று கிராமமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.(50-100)

காலைக்கதிர் Kalaikkathir

# நாடு மீண்டும் வீழ்ச்சியடைந்தால் இளைஞர்களே பாதிக்கப்படுவர்

## இப்படிக் கூறுகிறார் பாலித்த ரங்கே பண்டார



நாடு மீண்டும் வீழ்ச்சியடைந்தால் இளம் சந்ததியினரே அதிகம் பாதிக்கப்படப்போகின்றனர். அதற்கு இடமளிப்பதா என்பதை இளைஞர்கள் தீர்மானிக்க வேண்டும். அத்துடன் தேர்தலை பிற்போடுவதற்கு எங்களுக்கு எந்த தேவையும் இல்லை என ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற கட்சியின் பிராந்திய இளம் அமைப்பாளர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

வீழ்ச்சியடைந்திருந்த நாட்டையே ரணில் விக்ரமசிங்க பொறுப்பெடுத்து, தற்போது மக்கள் ஓரளவு நிம்மதி மூச்சுவிட முடியுமான நிலைக்கு கொண்டுவந்துள்ளார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் அரசியல் அனுபவமில்லாத, சாதாரண செயலாளர் ஒருவரை மக்கள் ஜனாதிபதியாக தெரிவு செய்ததன் பிரதிபலனே நாடு இந்த நிலைக்கு செல்ல பிரதான காரணமாகியது. அதனால் மீண்டும் பரீட்சித்துப் பார்க்க ஒருவரை மக்கள் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் தெரிவு செய்யுமானால் நாடு மீள கட்டியெழுப்ப முடியாத பாதாள நிலைக்கு தள்ளப்படும்.

அவ்வாறான நிலைக்கு நாடு தள்ளப்பட்டால் அதனால் அதிகம் பாதிக்கப்படப்போவது இளம் சந்ததியினராகும். வயது முதிர்ந்தவர்களும் பாதிக்கப்படுவார்கள். ஆனால், அவர்கள் அதன் பாதிப்பை குறுகிய காலத்துக்கே அனுபவிப்பார்கள். அதனால் நாடு மீண்டும் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பிருந்த நிலையைவிட மோசமான நிலைக்கு தள்ளப்படுவதற்கு இடமளிப்பதா என்பதை இளைஞர்கள் தீர்மானிக்க வேண்டும்.

ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட தேசிய மக்கள் சக்தி நாடு பூராகவும் மக்கள் பேரணிகளை நடத்தி, மக்களின் ஆதரவு தங்களுக்கு இருப்பதாக பிரசாரம் செய்துவர ஆரம்பித்தது. இதனை பார்த்துக்கொண்டிருந்த ஐக்கிய மக்கள் சக்தியும் பிரசார கூட்டங்களை நடத்த ஆரம்பித்தது. இவர்கள் தங்களின் கூட்டங்களுக்கு தூர பிரதேசங்களில் இருந்து பஸ்களில் ஆட்களை அழைத்துவந்தே சனத்தை காட்டுகின்றனர். இதற்காக பாரியளவில் பணம் செலவழித்து வருகிறார்கள். ஆனால், ஐக்கிய தேசிய கட்சி தற்போதுதான் தேர்தல் பிரசார கூட்டம் நடத்த ஆரம்பித்திருக்கிறது.

கண்டியில் நாங்கள் நடத்திய கூட்டத்தில் பாரிய மக்கள் கூட்டம் வந்திருந்தது. இந்த கூட்டத்துடன் இவர்களது கூட்டங்கள் பின்தள்ளப்பட்டுள்ளன. நாங்கள் அமைதியாக இருக்கும்போது இவர்கள் வீரர்கள் போன்று செயற்பட்டனர். நாங்கள் களத்துக்கு வந்ததுடன் இவர்களின் மக்கள் கூட்டம் செயலிழந்துள்ளது.

அத்துடன் ஜனாதிபதி தேர்தலை நாங்கள் பிற்போட முயற்சிப்பதாக சிலர் தெரிவித்து வருகின்றனர். தேர்தலை பிற்போடுவதற்கு எங்களுக்கு எந்த தேவையும் இல்லை. தேர்தல் பிற்படுவதால் எங்களுக்கே அது பாதிப்பாக அமைகிறது. அதனால் விரைவாக ஜனாதிபதி தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்குமாறு நாங்கள் தேர்தல் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்திருக்கிறோம். நாடு வீழ்ச்சியடையும்போது, நாட்டை பொறுப்பேற்று, நாட்டை இந்த நிலைக்கு கொண்டுவந்த வேட்பாளர் எங்களிடம் இருக்கும்போது நாங்கள் ஏன் தேர்தலை பிற்போட வேண்டும்?

ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறப்போவது ரணில் விக்ரமசிங்க, அப்படி இருக்கும்போது தேர்தல் பிற்போடப்பட்டால் எங்களுக்கே பாதிப்பு ஏற்படுகிறது. அதனால் ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்திலேயே தேர்தலுக்கான திகதியை அறிவிக்குமாறு நாங்கள் தேர்தல் ஆணையாளரை கேட்டுள்ளோம். என்றார்.(05)

# 10இல் 4 குடும்பங்கள் அன்றாட உணவுத் தேவையை பூர்த்திசெய்ய மாற்று வழிகளைக் கையாள்கின்றன

## உலக உணவுத்திட்டம் அறிக்கை

பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை படிப்படியாக மீண்டுவருகின்ற போதிலும், நாடளாவிய ரீதியில் 10 குடும்பங்களில் 4 குடும்பங்கள் தமது அன்றாட வாழ்வாதார மற்றும் உணவுத்தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்வதற்கு பல்வேறுபட்ட மாற்றுவழிமுறைகளைக் கையாண்டுவரும் நிலை தொடர்வதாக உலக உணவுத்திட்டம் சுட்டிக்காட்டியுள்ளது.

உலக உணவுத்திட்டத்தின் வழிகாட்டலின்கீழ் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கையிலுள்ள முகவரமைப்புக்களும், சிவில்சமூக அமைப்புக்களும் இலங்கை அரசாங்கத்துடன் ஒருங்கிணைந்து நாடளாவிய ரீதியில் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளைக் கண்டறிவதற்கும், இதுகுறித்து அரசாங்கம், மனிதாபிமான உதவி வழங்கல் அமைப்புக்களுக்கு அவசியமான தகவல்களை வழங்குவதற்குமான மதிப்பாய்வு ஒன்றினைக் கடந்த 11 - 14 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் முன்னெடுத்திருந்தன.

அதேவேளை தேசிய பாடசாலைகளுக்கான உணவு வழங்கல் செயற்திட்டத்தை விரிவுபடுத்தும் நோக்கில் உலக உணவுத்திட்டத்தினால் கடந்த ஜூன் மாதம் நாடளாவிய ரீதியில் 7012 பாடசாலைகளுக்கு 421மெட்ரிக்தொன் எண்ணெய் மற்றும் 271மெட்ரிக் தொன் பேரீச்சம்பழம் என்பன பகிர்ந்தளிக்கப்பட்டன.

அதேபோன்று 'ஆரோக்கியமான உணவு எமது உரிமை' எனும் தொனிப்பொருளில் அனுட்டிக்கப்பட்ட தேசிய போசணை மாதத்தை (ஜூன்) முன்னிட்டு சுகாதார அமைச்சின் போசணைப்பிரிவு அவசியமான தகவல்களைத் திரட்டுவதற்கும், தெளிவூட்டல்களை வழங்குவதற்கும், தொடர்பாடல் வழிமுறைகளை ஊக்குவிப்பதற்கும் உலக உணவுத்திட்டத்தினால் பரந்துபட்ட அளவிலான ஒத்துழைப்புக்கள் வழங்கப்பட்டன.

மேலும் நாடளாவிய ரீதியில் உணவுப் பாதுகாப்பின்மை நெருக்கடியினால் பாதிக்கப்பட்டிருப்போருக்குக் கடந்த மாதம் மொத்தமாக 592 மெட்ரிக்தொன் உணவுபகிர்ந்தளிக்கப்பட்டிருப்பதுடன், ஜூலை - டிசம்பர் வரையான எதிர்வரும் 6 மாதகாலத்துக்கு நலிவுற்ற சமூகப்பிரிவினருக்கு அவசியமான உதவிகளை வழங்குவதற்குத் தேவையான நிதியின் பெறுமதி 84,425 அமெரிக்க டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் இலங்கையின் தற்போதைய நிலைவரம் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள உலக உணவுத்திட்டம், கடந்தகால பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை படிப்படியாக மீண்டுவருகின்ற போதிலும், நாடளாவிய ரீதியில் 10 குடும்பங்களில் 4 குடும்பங்கள் தமது அன்றாட வாழ்வாதார மற்றும் உணவுத்தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு பல்வேறுபட்ட மாற்றுவழிமுறைகளைக் கையாண்டுவருவதாக சுட்டிக்காட்டியுள்ளது.

அத்தோடு இலங்கை காலநிலைமாற்ற சவால்களுக்கு முகங்கொடுத்திருப்பதாகவும், அதிகரித்த வெப்பநிலை மற்றும் உயர்வான வெப்பம் என்பன மக்களின் ஆரோக்கியத்திலும், விவசாய நடவடிக்கைகளிலும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும் உலக உணவுத்திட்டம் தெரிவித்துள்ளது. (05)

# இரத்தக் காயங்களுடன் மாத்தறையில் சடலம் மீட்பு

மாத்தறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வெரதுவ பகுதியில் உள்ள வீடொன்றில் இரத்தக்காயங்களுடன் நபரொருவரின் சடலம் வியாழக்கிழமை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் 54 வயதுடைய ஆண் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், மரணத்திற்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை எனவும் இந்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர் எனத் தெரிவித்துள்ளனர்.(05)

# முட்கிளுவை முள்ளு குத்தி மூதாட்டி ஒருவர் இறப்பு

## யாழ்ப்பாணத்தில் சம்பவம்

முட்கிளுவை மரத்தின் முள்ளு குத்தியதில் ஏற்பட்ட காயம் காரணமாக மூதாட்டி ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம்-காரைநகர், களபூமி பகுதியைச் சேர்ந்த வனித்தேற்கரசி பாலசுப்பிரமணியம் (வயது 73) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் விறகு சேகரிப்பதற்கு சென்ற போது, முட்கிளுவை மரத்தின் முள்ளு காலில் குத்தியுள்ளது.

அதனால் ஓரிரு நாள்களில் காலில் வலிஏற்பட மூளாய் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட நிலையில், மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

முள்ளு குத்திய காயத்தில் ஏற்பட்ட கிருமி தொற்று காரணமாகவே உயிரிழப்புஏற்பட்டுள்ளதாக உடற்கூற்றுபரிசோதனையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (05)

# மோ.சைக்கிள் – அம்புலன்ஸ் நேருக்கு நேர் மோதி விபத்து

## இளைஞர் உயிரிழப்பு

காலி - கொழும்பு வீதியில் தருண சேவா மாவத்தை சந்தியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று (வெள்ளிக்கிழமை) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

காலியிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த பலப்பிட்டிய வைத்தியசாலைக்கு சொந்தமான அம்புலன்ஸ் ஒன்று எதிர்த்திசையில் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் செலுத்துனர் காலி கராப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

பாணந்துறை பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞரொருவரே உயிரிழந்துள்ளார். இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# சட்டவிரோத மதுபானங்களுடன் திருமலையில் ஒரு பெண் கைது



திருகோணமலை சம்பூர் பொலீஸ் பிரிவுக்கு உட்பட்ட சேனையூர் ஆறாம் வட்டாரம் பிரதேசத்தில் சட்டவிரோத மதுபானங்களுடன் பெண் ஒருவரைக் கைதுசெய்ததாக சம்பூர் பொலீஸார் தெரிவித்தனர் குறித்த பெண்ணிடம் இருந்து பியர் 6 ரின்களும் சாராயம் இரண்டு போத்தல்களும் கசிப்பு ஒரு போத்தலுமாகக் கைப்பற்றப்பட்டன என சம்பூர் பொலீஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் சேனையூர் ஆறாம் வட்டாரத்தைச் சேர்ந்த 42 வயது பெண் எனவும் சம்பூர் பொலீஸார் தெரிவித்தனர். சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபட்டது அனுமதி இல்லாத மதுபான விற்பனையில் ஈடுபட்டது போன்ற இரு குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இந்த பெண் கைது செய்யப்பட்டார் என சம்பூர் பொலீஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட பெண் நீண்ட காலமாக அப்பிரதேசத்தில் இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளுடன் பேணி வந்ததாக கிடைத்த தொடர்ச்சியான தகவலின் அடிப்படையில் இவர் கைது செய்யப்பட்டார் என சம்பூர் பொலீஸார் தெரிவித்தனர். மதுபானங்களையும் கைதுசெய்யப்பட்ட பெண்ணையும் நேற்று மூதூர் நீதிமன்ற நீதிவான் முன்னிலைப்படுத்த சம்பூர் பொலீஸார் நடவடிக்கை எடுப்பதாக எடுத்திருப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.(05)

# தமிழர் ஒற்றுமையை வெளியுலகுக்கு காட்டுவதாக கூறுவோர் தமிழ் மக்களின் நலனுக்காக இதுவரை சாதித்தவைகள் என்ன?

## ஈ.பி.டி.பியின் ஊடக பேச்சாளர் கேள்வி




புலிகளை மட்டுமே அழித்து பயங்கரவாத யுத்தத்தை வெற்றிகொண்டேன்எனமமதையுடன் முழங்கிய சரத் பொன்சாவுக்கு தமிழ் மக்களைவாக்களிக்கச்சொல்லி தமிழ் மக்களின்ஒற்றுமையைவெளியுலகுக்கு காட்டியதாகக் கூறிய தமிழ் தேசியம் பேசும் கட்சிகள் அதனூடாக தமிழ் மக்களின் நலனுக்காக இதுவரை சாதித்தது என்ன என ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சியின்ஊடகபேச்சாளர் ஐயாத்துரைசிறீரங்கேஸ்வரன்கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நடைபெற்றஊடகசந்திப்பில்இவ்வாறு கேளிவியெழுப்பியிருந்தஅவர்மேலும் கூறுகையில் -

தமிழ் மக்கள் ஒற்றமையாக இருக்கின்றோம்என்பதை உலகுக்க காட்டுவதுதான் எங்களது விருப்பம். அது தான் பொது வேட்பாளர் விடயம் என புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் சில தினங்களுக்கு முன்னர் கூறியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 22 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருந்த சமயம் அக்கட்சிகளின்தலைவர்களுக்குள்ஒற்றுமைஎவ்வாறு இருந்தது? என்பதை மக்கள் நன்கு அறிவார்கள். அச்சமயம் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி தீவிரமான போலித்தேசியம் பேசியிருந்தன. அதன்பின்னர் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களை கொண்டிருந்த போது புளொட் அமைப்பும் அதில் அங்கம் வகித்திருந்தது.

பின்னர் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் 10 நாடாளுமன்ற உறுப்பினராகளாக குறைவடைந்த பின்னரும் அவர்களது ஒற்றுமையை சர்வதேசம் நன்கு அறிந்துவைத்திருக்கின்றது.

சமீபத்தில்ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க உட்பட இந்தியத் தரப்பினரும் அதேபோன்று பல நாடுகளின் இராஜதந்திரிகளும் கூட்டமைப்பின் ஒற்றுமைபற்றி பல்வேறு கருத்துக்களை வெளியிட்டுவந்துள்ளனர்.

அமரர் சம்பந்தன் அவர்களது இறுதி நிகழ்வில் கலந்துகொண்டு அஞ்சலிசெலுத்த வந்திருந்த பாரதிய ஜனதா க்சியின் தமிழக தலைவர் அண்ணா மலையை சந்திக்கும்போது கூட போலித்தேசியம் பேசுகின்ற கட்சிகள் ஒற்றுமையை அதில் கூட காண்பித்திருக்கவில்லை. இதெல்லாம் அனைவரும் அறிந்த விடயம்.

இந்த சூழலில் ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் திணைக்களத்திற்கு முழுமையான அதிகாரம் கிடைக்கப்பெற்றுள்ளநிலையில்பொதுவேட்பாளர்யார் என்பதைக் கூட தெரிவு செய்ய முடியாத நிலையில் ஒற்றுமையை காட்டுவதன் மூலம் நாம் உலக நாடுகளிடையே எமது சரியான நிலைப்பாட்டை காட்டக்கூடியதாக இருக்கும் அதற்காகவே இந்த முயற்சி செய்கின்றோம் என ஏமாற்றுவது தமிழ் மக்களையே தவிர தென்னிலங்கையை அல்ல.

சரத்பொன்சேகவுக்குவாக்களிக்கசொன்னவர்கள் பின்னர் மைத்திரிக்கு வாக்களிக்க சொன்னவர்கள் அதன்பின்னர்சஜித்துக்குவாக்களிக்கசொன்னவர்கள் இவ்வாறுதொடர்ச்சியாகதமிழ்மக்களின்வாக்குகளை தமது நலன்களுக்காக பகடையாக்கி வருகின்றனர்.

முதலில் தூய்மையான ஒற்றுமையை, பொதுவான அரசியல் கொள்கையை, தமது பொது வேலைத்திட்டத்தை தைரியமாக மக்களிடத்தில் எடுத்துச் சொல்வார்களா? அவ்வாறான தன்மை அவர்களிடம் இருக்கின்றதா?

மக்களிடம் தத்தமது கொள்கைகளை எடுத்துச் செல்ல தென்பற்றவர்களே இவ்வாறு ஒற்றுமை, பொது வேட்பாளர் என்ற வேடங்களை அணிந்து செல்லவேண்டிய வெட்கக்கேடான நிலையில் உள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(05)

# மினுவாங்கொடை கல்வித் திணைக்களத்தால் எம்.ஐ. அதாஹிர் ரஹ்மானுக்குக் கௌரவம்

ஏ.சி பௌசுல் அலிம்)

மினுவாங்கொடைவலயக்கல்வித்திணைக்களம், எம்.ஐ.அதாஹிர்ரஹ்மான்அவர்களைகௌரவிக்கும் வகையில் தமிழ் தினப் போட்டியின் ஓர் அங்கமாக விசேட நிகழ்வொன்றை, அல் அமான் முஸ்லிம் மகாவித்தியாலயத்தின் உம்மு ஹபீபா கேட்போர் கூடத்தில் கடந்த ஜீலை 18 ஆம் திகதி அன்று கொண்டாடியது.

2003 முதல் 2014 வரை அல் அமான் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் பணியாற்றிய அதாஹிர் ரஹ்மானின் முக்கிய பங்களிப்புகளை தமிழ் மொழி பிரிவுக்கான பணிப்பாளர் எம்.ஏ.எம். ரிஸ்வி சிறப்பித்து குறிப்பிட்டார்.







கௌரவஅதாஹிர்ரஹ்மான்அவர்கள்இலங்கை கல்விநிர்வாகசேவைக்குதெரிவுசெய்யப்பட்டதற்காக கல்வித் துறைக்கும் தமிழ் சமூகத்திற்கும் அவர் ஆற்றிய பங்களிப்பை மதிக்கும் வகையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில், மினுவாங்கொடை வலயக் கல்வித் திணைக்களத்தின் முன்னாள் கல்வி பணிப்பாளர் எம். அஷ்ரப், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டனர். இந்த நிகழ்வு சமூகத்தில் பெரும் அங்கீகாரம் மற்றும் பேரன்பினை உருவாக்கி, தமிழ் தினப் போட்டியின் ஒரு முக்கிய அங்கமாக சிறப்பாக கொண்டாடப்பட்டது.(05)

# 'ஓய்ந்த பின்பும் ஓயாத அழைப்புக்கள்' சிறுகதை தொகுப்பு வெளியீட்டு விழா

(அபு அலா)

அன்பின் பாதை எண்ணம் போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்ற றொசில்டா அன்டனின் 'ஓய்ந்த பின்பும் ஓயாத அழைப்புக்கள்' சிறுகதை தொகுப்பு நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

எண்ணம் போல் வாழ்க்கை அமைப்பின்தலைவர்கனக.தீபகாந்தன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த சிறுகதை தொகுப்பு

நூல் வெளியீட்டு விழாவுக்கு கிழக்கு மாகாண மீன்பிடித்துறை மாகாணப் பணிப்பாளர் சி.சுதாகரன் (கவிஞர் நிலையூர் சுதா) பிரதம விருந்தினராவும், கிழக்கு மாகாண இலங்கை வங்கி சந்தைப்படுத்தல் முகாமையாளர் ந.து.ரகுராம் மற்றும் சட்டத்தரணி

திருமதி புனிதவதி துஷ்யந்தன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நூலின்முதல்பிரதியைசிரேஷ்ட ஊடகவியலாளரும் ஓய்வுபெற்ற அதிபருமாகிய திருமலை நவமும் சிறப்புப் பிரதியை வைத்தியர் க. ஜெயகாந்தராஜா ஆகியோர்பெறவுள்ள மையும் குறிப்பிடத்தக்கது.

(05)

# ஜனாதிபதி புலமைப் பரிசில் வவுனியாவில் தொடக்கம்



வறிய மாணவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் ஜனாதிபதியின் புலமைப் பரிசில் திட்டம் வவுனியா மாவட்டத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வவுனியா, மதவுவைத்தகுளம் பகுதியில் அமைந்துள்ள பொருளாதார



மத்திய நிலையத்தில் குறித்த நிகழ்வு நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்றது.

நாடு பூராகவும் வறிய மாணவர் களின் கல்வித் தரத்தை உயர்த்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் பல பாடசாலைகளிலும் இருந்து பல மாண வர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அதற்கமைவாகவவுனியாமாவட்டத்தில் முதல் கட்டமாக தெரிவு செய்யப்பட்ட சில பாடசாலைகளை சேர்ந்த மாணவர்களுக்கு ஜனாதிபதியின் புலமைப் பரிசில் இதன்போது வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில்கிராமியபொருளாதார அபிவிருத்திஇராஜாங்கஅமைச்சர்காதர் மஸ்தான்,வன்னிமாவட்டநடாளுமன்ற உறுப்பினரும், வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கு.திலீபன், ஜனாதிபதி செயலக மேலதிக சிரேஸ்டசெயலாளர்சமன்பந்துலசேன, வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, மேலதிக அரசாங்க அதிபர், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர், வவுனியா தெற்கு மற்றும் வடக்கு வலய கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள், பிரதேச செயலாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள்எனப்பலரும்இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.07.2024இல் வெளியிடப்பெற்றது